**ஜூலை – 25**


# TNPSC துளிகள்

- ❖ எல்லை மீதான இந்திய – வங்க தேச கூட்டுக்குழுவின் முதல் சந்திப்பு திரிபுராவில் உள்ள அகர்தலாவில் நடைபெற்றது.
- ❖ தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மன்றம் (National Council of Educational Research and Training - NCERT) அதன் பாடநூல்களில் QR குறியீட்டினை (Quick Response) அறிமுகப்படுத்தும் பணியினை தொடங்கியுள்ளது.
- ❖ வடகிழக்கு ரயில்வே ஊழியர்களின் நிபுணத்துவம் மற்றும் செயல்திறனை வலுப்படுத்தும் முயற்சியில் இந்தியன் ரயில்வே பிராந்திய ரயில் பயிற்சி நிறுவனத்தினை (Regional Rail Training Institute - RRTI) உத்திரப் பிரதேசத்திலுள்ள காசிப்பூரில் தொடங்கியுள்ளது.

# தேசியச் செய்திகள்

### சமரச முறை ஆவணங்கள் (திருத்த) மசோதா, 2017


- ❖ நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள காசோலை மோசடி வழக்குகளின் எண்ணிக்கையை குறைப்பதற்காக சமரச முறை ஆவணங்கள் (திருத்த) மசோதா, 2017-க்கு மக்களவை அனுமதி அளித்துள்ளது.




- ❖ இந்த மசோதா சமரச முறை ஆவணங்கள் சட்டம், 1881-னை திருத்தி அமைக்கிறது. இத்திருத்தம், திருப்பி அனுப்பப்பட்ட காசோலைகள் சம்பந்தமான பிரச்சினைகள் மற்றும் அத்தகைய வழக்குகளின் விசாரணைக்கான தேவையற்ற காலதாமதம் ஆகியவற்றை சரிசெய்யும்.
- ❖ இந்த மசோதாவின் சிறப்பம்சங்கள்
  - இடைக்கால இழப்பீடு
  - மேல் முறையீடு இருந்தால் அதற்கான வைப்புத் தொகை
  - இடைக்கால இழப்பீட்டினை திரும்ப செலுத்துதல்

## சுகன்ய சம்ரிதி யோஜனா

- பிரபலமான பெண்குழந்தை சேமிப்புத் திட்டமான சுகன்ய சம்ரிதி யோஜனாவிற்கு தேவைப்படும் குறைந்தபட்ச வருடாந்திர வைப்புத் தொகையினை முன்பு இருந்த ரூ.1000லிருந்து ரூ.250-க்கு மத்திய அரசு குறைத்துள்ளது.




- இது தொடர்பாக அரசாங்கம், சுகன்ய சம்ரிதி கணக்குகள் விதி, 2016-னை திருத்தி அமைத்து இத்திட்டத்தின் நன்மையை அதிக மக்கள் பெறும் வகையில் இயலச் செய்துள்ளது.
- இத்திட்டம் ஜனவரி 2015-ல் பேடி பச்சாவோ பேடி பதாவோ (Beti Bacho Beti Padho-BBBP) என்ற திட்டத்தின் கீழ் சிறுசேமிப்பு திட்டமாகத் தொடங்கப்பட்டது.

## பொது விவகாரங்கள் குறியீடு - 2018 (Public Affairs Index - PAI)

- பொது விவகாரங்கள் குறியீடு 2018-ன் படி, 2016-ம் ஆண்டிலிருந்து தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக கேரளா சிறந்த ஆட்சிமுறையைக் கொண்ட மாநிலமாக முதலிடத்தில் உள்ளது. இதனையடுத்து தமிழ்நாடு இரண்டாம் இடத்தில் உள்ளது.
- சிறந்த ஆட்சி முறையை வழங்கும் முதல் ஐந்து மாநிலங்களில் தெலுங்கானா, கர்நாடகா மற்றும் குஜராத் ஆகியவை முறையே மூன்றாவது, நான்காவது மற்றும் ஐந்தாவது இடங்களில் உள்ளன.
- மத்தியப் பிரதேசம், ஜார்க்கண்ட் மற்றும் பீகார் ஆகியன PAI-ல் பின்தங்கிய இடங்களில் உள்ளன. இம்மாநிலங்களில் உள்ள அதிகபட்ச சமூக மற்றும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை இது குறித்துக் காட்டுகிறது.
- சிறிய மாநிலங்களிடையே (2 கோடிக்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட) ஹிமாச்சலப் பிரதேசம் இப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளது. இதனையடுத்து கோவா, மிசோரம், சிக்கிம் மற்றும் திரிபுரா ஆகியன அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.
- சிறிய மாநிலங்களிடையே நாகாலாந்து, மணிப்பூர் மற்றும் மேகாலயா ஆகியன இக்குறியீட்டில் மிகவும் பின்தங்கி உள்ளன.



WINNER FOR 3RD CONSECUTIVE YEAR

➤ The Public Affairs Index 2018 released by the thinktank Public Affairs Centre examines governance performance in the states through a data-based framework, ranking them on social and economic development

➤ The thinktank has undertaken the study across all the Indian states considering them across 10 themes such as essential infrastructure, support to human development, social protection, women and children as well as law and order

➤ Tamil Nadu, Telangana, Karnataka and Gujarat followed Kerala among the top five states delivering good governance

A file photo of Kudumbashree members attending a drama workshop

- பொது விவகாரங்கள் மையம் இந்த வருடம் இக்குறியீட்டில் 'Children of India' என்ற புதிய அத்தியாயத்தை சேர்த்துள்ளது. இது ஒவ்வொரு மாநிலமும் எந்த அளவிற்கு குழந்தைகளுக்கு ஏதுவான சூழ்நிலையை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன என்பதின் தகவல்களை தரும்.
- கேரளா, ஹிமாச்சலப் பிரதேசம் மற்றும் மிசோரம் ஆகிய மாநிலங்கள் குழந்தைகளுக்கு ஏதுவான வாழ்நிலையை வழங்குவதில் இக்குறியீட்டில் முதலிடத்தில் உள்ளன.
- இக்குறியீடு 2016-லிருந்து பெங்களூருவின் பொது விவகாரங்கள் மையத்தினால் (Public Affairs Centre - PAC) வெளியிடப்படுகிறது. PAC ஒரு இலாப நோக்கமற்ற, இந்தியாவின் ஆட்சிமுறையை மேம்படுத்தும் எண்ணம் கொண்ட சிந்தனை மையம் ஆகும்.
- இது மறைந்த புகழ்பெற்ற இந்திய பொருளாதார வல்லுநர் மற்றும் அறிஞர் சாமுவேல் பாலினால் 1994-ல் நிறுவப்பட்டது.

## GST - சபையின் 28வது சந்திப்பு

- GST சபையின் 28வது சந்திப்பு இடைக்கால நிதி அமைச்சர் பியூஸ் கோயல் தலைமையில் புதுதில்லியில் நடைபெற்றது.
- GST சபை துப்புரவு துணிகளுக்கு (Sanitary Napkin) சரக்கு மற்றும் சேவை வரியிலிருந்து விலக்கு அளித்துள்ளது.
- முன்பு, துப்புரவு துணிகளுக்கு 12% வரி விதிக்கப்பட்டிருந்தது.
- மற்ற பொருட்களுக்கான வரி குறைப்புகளுடன் சேர்த்து மின்னணுப் பொருட்களில் பயன்படுத்தப்படும் லித்தியம்-அயர்ன் பேட்டரிகளுக்கான தற்போதைய GST படிமுறையான 28%லிருந்து 18%-க்கு வரியை குறைக்கவும் இக்குழு பரிந்துரைந்துள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## 4-வது பிம்ஸ்டெக் மாநாடு

- பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பிற்கான வங்காள விரிகுடா முன்னெடுப்பு அமைப்பின் (BIMSTEC - Bay of Bengal Initiative for Multi Sectoral Technical and Economic Co-Operation) நான்காவது மாநாடு நேபாளத்தின் காத்மாண்டுவில் நடைபெற்றது.
- பிம்ஸ்டெக் அமைப்பிற்கு தற்பொழுது நேபாளம் தலைமை வகிக்கிறது.
- இந்த மாநாட்டின் நோக்கம் பிம்ஸ்டெக் நாடுகளுக்கிடையே தரைவழிப் போக்குவரத்து, விமானப் போக்குவரத்து மற்றும் மின் செலுத்தத் தொடர் ஆகியவற்றின் இணைப்பை அதிகரிப்பதாகும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## டிரெட்வில் (Treadwill)

- கான்பூரின் இந்திய தொழில்நுட்ப நிறுவனம் (Indian Institute of Technology - IIT) மக்களின் மனநலம் சார்ந்த பிரச்சினைகளை சமாளிக்க டிரெட்வில் என்ற ஒரு ஆன்லைன் சாதனத்தினை உருவாக்கியுள்ளது.
- இச்சாதனம், கணினி அறிவியல் மற்றும் பொறியியல் (Computer Science & Engineering), மனிதநேயம் மற்றும் அறிவியல் (மனோதத்துவம்) (HSS-Humanities and Social Sciences) ஆகிய துறைகளின் கூட்டுழைப்பினால் உருவாக்கப்பட்டது.
- இது மனஅழுத்தம் தொடர்பான அறிகுறிகளைக் கொண்ட மக்களுக்கு உதவும் என்று நிரூபிக்கப்பட்ட, ஒரு அறிவாற்றல் சார்ந்த நல்லொழுக்க சிகிச்சை (Cognitive behavioral Therapy - CBT) முறை ஆகும்.

## தொலை உணர்வு கருவி

- செயற்கைக் கோள் தகவல்களின் வணிகரீதியான பயன்பாட்டினை மேம்படுத்துவதற்காக தேசிய வானியல் மற்றும் விண்வெளி நிர்வாகம் (National Aeronautics and Space Administration - NASA) தொலை உணர்வு கருவியினைத் (Remote Sensing Toolkit) தொடங்கியுள்ளது.
- அறிவியல் சமூகம், மற்ற அரசு நிறுவனங்கள் மற்றும் லாபம் ஈட்டும் நோக்கமில்லா அமைப்புகள் ஆகியவற்றிற்கு நன்மை பயக்கும் தொலை உணர்வுத் தகவல்களை தரும் NASA-வின் தொழில்நுட்ப பரிமாற்றத் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த கருவி வெளியிடப்பட்டுள்ளது.
- புதிய கருவிகளை உருவாக்க தேவையான தயாராக உள்ள கருவிகள் மற்றும் குறியீடுகள் மற்றும் தகவல்களை நாடும் பயனாளர்கள் ஆகியவர்களுக்கு உதவுவதற்காக இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

## மைக்ரோடாட் (Micro Dot) தொழில்நுட்பம்

- வாகனத் திருட்டுகளைப் பற்றி அறிவதற்கு உதவும் புதிய மைக்ரோடாட் தொழில்நுட்பத்தின் தொடக்கத்தினை இந்திய அரசு அறிவித்துள்ளது.
- இதன் கீழ், வாகனத்தின் என்ஜின் உட்பட்ட முழுப் பகுதியிலும் லேசர் பொறிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான சிறிய புள்ளிகள் வாகனம் முழுவதும் வாகன அடையாள எண்ணுடன் தெளிக்கப்படும்.
- இந்த தொழில்நுட்பம் உயர்ந்த உந்தூர்தி தொழில்நுட்ப தகுதிநிலை அமைப்பான மத்திய மோட்டார் வாகன விதிகள் தொழில்நுட்ப நிலைக்குழுவின் (Central Motor Vehicles Rules - Technical Standing Committee - CMVR - TSC) அனுமதியினை பெற உள்ளது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## எறும்புத் தின்னி கடத்தல் மோசடிக்கான சிறப்புப் பணிக் குழு

- 'அருகிவரும் உயிரினமான' எறும்புத் தின்னி கடத்தல் மோசடியைத் தடுக்க ஒடிசா மாநில சிறப்புப் பணிக் குழு சர்வதேச அமைப்புகளுடன் இணைந்து பணியாற்ற முடிவு செய்துள்ளது. பெரும்பாலான சட்ட விரோத வர்த்தகத்தில் ஈடுபடுத்தப்படுவதில் பாலூட்டியான எறும்புத் தின்னியும் ஒன்று.
- இந்த கிரகத்தில் செதில்களை உடைய பாலூட்டி எறும்புத் தின்னி மட்டுமே.
- உலகம் முழுவதும் 8 வகை இனங்களைக் கொண்டுள்ளது எறும்புத் தின்னி. இந்தியாவில் இரண்டு வகை இனங்கள் மட்டுமே காணப்படுகின்றன.

  அவையாவன

  - பெரும்பாலும் வடகிழக்கு மாநிலங்களில் காணப்படும் சீனாவின் எறும்புத் தின்னி (மணிஸ் பெண்டடாசிட்யாலா)
  - இந்திய எறும்புத் தின்னி (மணிஸ் கிரஸிகவ்டேட்டா)
- ஐக்கிய நாடுகளுடன் இணைக்கப்பட்ட பன்னாட்டு இயற்கை பாதுகாப்புச் சங்கத்தின் (IUCN - International Union for Conservation of Nature) சிவப்புப் பட்டியல் படி 'உயர் அச்சுறுத்தல்' நிலையில் உள்ள பாலூட்டியாக 'சீனாவின் எறும்புத் தின்னி' பட்டியலிடப்பட்டுள்ளது.
- இந்திய எறும்புத் தின்னி 'அருகி வரும்' உயிரினமாக IUCN-ன் சிவப்புப் பட்டியலில் பட்டியலிடப்பட்டுள்ளது.
- இது வனவிலங்கு பாதுகாப்புச் சட்டம், 1972-ன் படி அட்டவணை 1ல் வகைப்படுத்தப்பட்டு பாதுகாக்கப்படும் விலங்காகும்.

## பருவநிலை மாற்றத்திற்கான மையம்

- உத்தரப் பிரதேசத்தின் லக்னோவில் விவசாயம் மற்றும் கிராமப்புற வளர்ச்சிக்கான தேசிய வங்கியானது (NABARD - National Bank for Agriculture and Development) பருவ நிலை மாற்றத்திற்கான மையத்தைத் தொடங்கியுள்ளது.
- தென் கிழக்கு ஆசியாவில் பருவநிலை மாற்றத்திற்காக தொடங்கப்பட்ட முதல் மையம் இந்த மையம் ஆகும்.

- அரசாங்கம், தனியார், நிதி நிறுவனங்கள் மற்றும் அரசு சாரா துறைகள் போன்ற பல்வேறு பங்குதாரர்கள் பருவநிலை மாற்றத்திற்காக எடுக்கும் நடவடிக்கைகளை துரிதப்படுத்துவது இதன் குறிக்கோளாகும்.
- நபார்டு வங்கியானது பருவநிலை மாற்ற நடவடிக்கைகளில் ஈடுபடும் பல்வேறு பங்குதாரர்களுக்கு திறன் கட்டமைப்புகளை வழங்குகிறது.
- நபார்டு வங்கி மூன்று முக்கிய பருவநிலை நிதிக்கான தேசிய நடைமுறைப்படுத்துதல் நிறுவனமாக செயல்படுகிறது. அவையாவன பசுமை பருவநிலைக்கான நிதி (GCF – Green Climate Fund), UNFCCC-ன் தத்தெடுப்புக்கான நிதி மற்றும் பருவநிலை மாற்றத்திற்கான தேசியத் தத்தெடுப்பு நிதி (NAFCC - National Adaptation fund for Climate Change).

# மாநிலச் செய்திகள்

## ஒடிசாவின் பழங்குடியினரின் நிலப்பட ஏடு

- ஒடிசா மாநிலத்தில் உள்ள பழங்குடியின மக்கள் தொகை மற்றும் கலாச்சாரத் தகவல்கள் அடங்கிய தொகுப்பான 'ஒடிசாவின் பழங்குடியினரின் நிலப்பட ஏட்டை' முதன்முறையாக அம்மாநில அரசு வெளியிட்டுள்ளது.
- நாட்டில் பழங்குடியினருக்காக வெளியிடப்பட்ட முதல் தொகுப்பு இதுவாகும்.
- இந்தப் புத்தகம் பழங்குடியினரின் மொழி மற்றும் கலாச்சாரத்திற்கான கல்விக் கழகத்துடன் (ATLC - Academy of Tribal language and Culture) இணைந்து எஸ்சி மற்றும் எஸ்டி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் வெளியிடப்பட்டது..
- 2011-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி, மத்தியப் பிரதேசத்திற்கு அடுத்து பழங்குயின மக்கள் தொகையில் ஒடிசா இரண்டாவது இடத்தில் உள்ளது.

## இ-பிரகதி (e-Pragati)

- ஆந்திரப் பிரசேதத்தில் உண்டவல்லியில் இ-பிரகதி - என்ற முக்கிய தளத்தை அமாமாநில முதல்வர் என்.சந்திரபாபு நாயடு தொடங்கி வைத்தார்.
- இ-பிரகதி ஆனது எல்லாத் துறைகளை இணைக்கவும் தன்னிச்சையாக பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் தளமாகவும் செயல்படும்.
- இ-பிரகதி என்பது டிஜிட்டல் துவக்க முயற்சியின் முன்னோடியாகும். இதன் நோக்கம் 34 துறைகள், 336 தன்னாட்சி நிறுவனங்கள், மற்றும் 745 கூடுதல் சேவைகள் ஆகியவற்றை மக்களுடன் இணைப்பது ஆகும்.
- இந்தத் திட்டத்தின் மூலம், அம்மாநில அரசு 'சன்ரைஸ் AP 2022' என்ற தொலைநோக்கு பார்வையை அடைய எண்ணுகிறது.

- - - - - - - - - - - - - - -